வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.1827/ஆ2/2022 நாள் 06.06.2022

----

பொருள் : பள்ளிக் கல்வி – தொடக்கக் கல்வி – 2022–23ஆம் கல்வி ஆண்டு அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை பணிகள் – பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கை தொடர்பாக பள்ளித் தலைமை ஆசிரியர்களால் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை சார்பாக.

பார்வை : சென்னை, தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.010886/ ஜெ2 /2022 நாள் 30.05.2022

----

பார்வையில் காணும் தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளில் ஊராட்சி ஒன்றிய / நகராட்சி / அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 2022–2023ஆம் கல்வியாண்டில் மாணவர் சேர்க்கைக்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

வேலூர் மாவட்டத்தில் பள்ளிகளில் சேராத மாணவர்கள் எவரும் இல்லை என்ற நிலை உருவாக்கிட, 5 வயது பூர்த்தியடைந்த அனைத்து குழந்தைகளையும் அரசுப் பள்ளியில் சேர்ப்பதற்கு கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது.

- பள்ளிவாரியாக 5+ மாணவர்கள் ஏற்கனவே எடுத்துள்ள கணக்கெடுப்பை உறுதி செய்தல்,
- ஒவ்வொரு கல்வி ஆண்டிலும் மக்கள் தொகை கணக்கெடுப்பை வீடுகள் தோறும் சென்று சரியாகவும் துல்லியமாகவும் எடுத்து தொடக்கக் கல்வி பதிவேடானது (EER) ஆண்டு தோறும் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டத்தின் மூலம் புதுப்பிக்கப்படுகிறது.
- இந்த பதிவேட்டில் ஐந்து வயது நிரம்பிய அனைத்து மாணவர்களையும் முதல் வகுப்பில் சேர்க்க வேண்டும்.
- பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கையினை கோடை விடுமுறை இறுதியில் பள்ளிகள் திறப்பதற்கு மூன்று நாட்களுக்கு முன்பாகவே நடைபெறச் செய்யுமாறு பள்ளியில் உள்ள அனைத்து ஆசிரியர்களுக்கும் அறிவுறுத்த வேண்டும்.
- குறிப்பாக ஒற்றை இலக்கத்தில் மாணவர்கள் எண்ணிக்கை உள்ள பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் அர்ப்பணிப்பு உணர்வுடன் பணியாற்றி மாணவர் எண்ணிக்கை இரட்டை இலக்கத்திற்கு கட்டாயமாக உயர்த்த அறிவுறுத்த வேண்டும்.

**பேனர்கள் மற்றும் துண்டு பிரசுரங்கள் மூலம் விளம்பரப்படுத்துதல் மற்றும் விழிப்புணர்வு மற்றும் சேர்க்கை பேரணி நடத்துதல்**

- அரசுப் பள்ளிகளில் தரமான இலவசக் கல்வி வழங்கப்படுவதை பொது மக்கள் அனைவரும் அறியும் வண்ணம் பேனர்கள் மற்றும் துண்டு பிரசுரங்கள் மூலம் மாணவர்களின் பெற்றோர்களுக்கு தெரியப்படுத்தி மாணவர்கள் சேர்க்கையை அதிகரிக்க செய்ய வேண்டும்–

- அரசுப் பள்ளிகளில் காற்றோட்டமான வகுப்பறைகள், குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, தமிழ் வழிப் பிரிவுகளுடன் துவங்கப்பட்டுள்ள ஆங்கில வழி பிரிவுகள் மற்றும் நன்கு பயிற்சி பெற்ற தகுதியான ஆசிரியர்கள் பணியில் உள்ளனர் என்பதனையும் மாணவர்களுக்கு அரசு வழங்கும் நலத்திட்டங்கள் சார்ந்தும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அறிவிப்பின்படி 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கப்பட உள்ளதையும் எடுத்துக் கூறி விழிப்புணர்வு பேரணி நடத்திட வேண்டும்.
- விழிப்புணர்வு பேரணி மற்றும் பிரச்சாரமானது பொது மக்கள் அதிகமாக கூடும் இடங்களில் மேற்கொள்ளப்படவேண்டும்.
- மக்கள் கூட்டம் அதிகம் உள்ள இடங்கள் மற்றும் மக்கள் குடியிருப்புகள் அதிகம் உள்ள இடங்களில் இவற்றில் கூடுதல் கவனம் செலுத்தப்படவேண்டும்.
- அனைத்து ஆசிரியர்களையும் கொண்டு விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ள வேண்டும்.
- பள்ளி செல்லாக் குழந்தைகளின் பெற்றோர்களை இனம் கண்டு, அவர்களையும் அழைத்து அறிவுரைகள் வழங்கிப் பேரணியில் இடம் பெறச் செய்திட வேண்டும்.
- கல்வி தொலைக் காட்சி, TAC TV மற்றும் அனைத்து தனியார் தொலைக்காட்சி ஒளிபரப்பு மூலம் விழிப்புணர்வு விளம்பரம் செய்தல்,
- பேரணி பற்றிய சுவரொட்டிகள்,
- வரவேற்பு வளைவுகள்,
- துணி / Flex board விளம்பரங்கள்,
- துண்டு பிரசுர விநியோகம்
- மாணவர்கள் சேர்க்கை பற்றிய வாசகம் அடங்கிய தட்டிப் பலகைகள்
- செய்தி தாட்களில் விளம்பரம்
- தொலைக்காட்சி / உள்ளூர் கேபிள் தொலைக்காட்சி வழியாக விளம்பரங்கள்,
- ஏழை மாணவர்களுக்கு கல்வி உதவிப் பொருள் வழங்குதல்.
- தேர்வில் சாதனை புரிந்த மாணவர்களுக்கு பரிசு வழங்குதல்,
- ஆட்டோ / வேன் மூலம் ஒலிபெருக்கி விளம்பரம் செய்தல்,

**பேரணியில் இடம்பெறத்தக்க வாசகங்கள்**

- பள்ளி வயதுக் குழந்தைகள் அனைவரையும் அரசுப் பள்ளிகளில் சேர்த்திடுவோம்,
- பள்ளி வயதுக் குழந்தைகளை வேலைக்கு அனுப்பாதீர், பள்ளிக்கு அனுப்புங்கள்,
- கல்வி என்பது குழந்தையின் அடிப்படை உரி9ம,
- சமதர்ம சமுதாயம் நிலைபெற ஒரே வழி கல்வி,
- குழந்தைகளை அரசு பள்ளிக்கு அனுப்புவோம், நூறு விழுக்காடு சேர்க்கை இலக்கை அடைவோம்.
- கற்றோர்க்கு சென்ற இடம் எல்லாம் சிறப்பு,
- நாட்டின் வளர்ச்சிக்கு கல்வியே உயிர்நாடி,
- ஐநது வயது நிரம்பிய பின் வீட்டில் இருப்பது நியாயமா?
- ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி இயக்கத்தின் முலம் அனைவரையும் படிக்க வைப்போம்,
- பெண்களை படிக்க வைப்போம் சமுதாய வளர்ச்சிக்கு வழி வகுப்போம்,
- புத்தகச் சுமையின்ற முப்பருவ முறையில் படித்திடுவோம்,
- பள்ளிக்குச் செல்வோம் பல்கலை அறிவோம்,
- அனைவரும் படிப்போம் அகிலத்தை வெல்வோம்,
- கல்வி மட்டுமே சமத்துவம் மலரச் செய்யும மிகப்பெரிய ஆயுதம்.

**அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு கிடைக்கும் முன்னுரிமைகள்**

- அரசு பள்ளிகளில் 1 முதல் 12ஆம் வகுப்பு வரை தமிழ் வழியில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு அரசுப் பணியில் 20 சதவிகிதம் முன்னுரிமை,
- 6 முதல் 12ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு உயர்கல்வி பயில 7.5 சதவிகிதம் முன்னுரிமை,
- பெண் கல்வி இடைநிற்றலைத் தவிர்க்க அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவியர்களுக்கு உயர் கல்வி பயில மாதந்தோறும் ரூ.1000/– வழங்குதல் போன்ற விழிப்புணர்வுகளை பெற்றோர்களுக்கு ஏற்படுத்துதல் சார்ந்து ஆசிரியர்கள் எடுத்துக் கூறி மாணவர் சேர்க்கையினை அதிகரிக்க நடவடிக்கைகள் எடுத்திட வேண்டும்.

**அரசு வழங்கிடும் நலத்திட்டங்களை அறியச் செய்தல்**

- பள்ளி குழந்தைகளுக்கு அரசு வழங்கும் விலையில்லா பாடநூல்கள், பாடக் குறிப்பேடுகள், நான்கு இணை சீருடைகள், புத்தகப்பை, வண்ணப் பென்சில்கள், காலணிகள், கிரையான்ஸ், நிலவரைப்படம், கணித உபகரணப் பெட்டி, பேருந்து பயண அட்டை,
- ஆதிதிராவிட நல ஊக்கத் தொகை, மிகவும் பிற்படுத்தப்பட்ட / சீர்மரபினர் வகுப்பு மாணவியர்களுக்கு ஊக்கத் தொகை,
- கிராமப்புற பெண்கல்வி ஊக்கத் தொகை,
- தூய்மைப் பணியாளர் குழந்தைகளுக்கான ஊக்கத் தொகை,
- திறனறித் தேர்வு ஊக்கத் தொகை,
- விபத்தில் வருவாய் ஈட்டும் பெற்றோரை இழந்த மாணவர்களுக்கான உதவி தொகை,
- கோவிட்–19ல் பாதிக்கப்பட்டு பெற்றோரை இழந்தை குழந்தைகளுக்கான உதவித் தொகை, மாற்றுத் திறனாளி குழந்தைகள் சலுகைகள் பெறுவதற்கான அடையாள அட்டை, மருத்துவ முகாம்கள்,
- ஊக்கத் தொகை சத்தான சத்துணவுடன் வாரம் 5 முட்டை வழங்குதல் பற்றி பள்ளி வழியாக சுவரொட்டிகள் / துண்டு பிரசுரங்கள் மூலம் விரிவான விளம்பரம் செய்யப்படவேண்டும்.

**பள்ளித் தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்களின் கடமைகள்**

- அங்கன்வாடியயில் பயிலும் குழந்தைகளில் 5+ வயதுடைய குழந்தைகளைக் கண்டறிந்து அவர்களை அரசுப் பள்ளிகளில் சேர்க்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
- பள்ளி அமைந்துள்ள குடியிருப்பு பகுதிகளில் உள்ள அனைத்து 5+ வயதுடைய குழந்தைகளைக் கண்டறிந்து அவர்களை அரசுப் பள்ளிகளில் சேர்க்க வீடுதோறும் நேரடியாக சென்று (Door to door canvas) சேர்க்கைகளை உறுதி செய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.
- பள்ளியை சுற்றியுள்ள குடியிருப்புகளில் 5+ வயதுடைய குழந்தைகளைக் கண்டறிந்து அவர்களை உடனடியாக அரசுப் பள்ளிகளில் சேர்க்க (Spot Admission) நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்
- இடைநின்ற மாணவர்களைக் கண்டறிந்து அவர்களை அரசுப் பள்ளிகளில் சேர்க்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
- பள்ளி அமைந்திருக்கும் குடியிருப்பு பகுதிகளில் உள்ள 5+ மாணவர்களை 100% அரசுப் பள்ளிகளில் சேர்ப்பது தலைமை ஆசிரியர் மற்றும் உதவி ஆசிரியரின் தலையாய கடமையாகும்.

- பள்ளியின் சாதனைகள், வளர்ச்சி, பல்வேறு வகையான அடிப்படை கட்டமைப்பு வசதிகள், கல்விமுறை, பாதுகாப்பு குறித்து பெற்றோர் ஆசிரியர் கூட்டம் மற்றும் பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தின் வாயிலாக பெற்றோர்களிடம் எடுத்து கூறலாம்.
- பள்ளிகளில் உள்ள திறன் வகுப்பறைகளின் (Smart class) செயல்பாடுகள் பற்றியும் விரைவுத் துலங்கல் குறியீடு (Quick Response Code) வழியாக பாடக் கருத்துக்கள் எளிமையாக்கப்பட்டு கற்றல் செயல்பாடு நடைபெறுகின்றது என்பதைப் பற்றியும் பெற்றோர்களுக்கு விரிவாக எடுத்துக் கூற வேண்டும்.
- தனியார் பள்ளிகளுக்கு நிகரான இணைய வழி (Online class) பாட கற்பித்தல் பற்றியும் புலனக்குழு (Whatsapp Group) வழி ஆசிரியர் – மாணவர் பாட பரிமாற்றங்கள் பற்றியும் பெற்றோர்களுக்கு விரிவாகவும் தெளிவாகவும் தெரிவித்தல் வேண்டும்.
- மாணவர்கள் சேர்க்கை பற்றி சமூக வலைதளங்களில் ஆடியோ / வீடியோ பதிவுகள் இடம் பெறச் செய்யலாம்
- பள்ளியில் சேரும் குழந்தைகளுக்கு, ஊக்கப் பரிசு வழங்குவதன் மூலம் மாணவர் சேர்க்கையை மேலும் அதிகரிக்கலாம்.

**பள்ளி மேலாண்மைக் குழு**

- பள்ளி அமைந்துள்ள குடியிருப்புப் பகுதிகளை பிரித்துக் கொண்டு, ஒவ்வொரு குடியிருப்பில் உள்ள பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் ஆசிரியர்களோடு இணைந்து அப்பகுதியில் உள்ள பள்ளி வயது குழந்தைகளின் பெற்றோர்களிடம் பள்ளியின் சிறப்புகளை எடுத்துக் கூறி மாணவர் சேர்க்கைக்கு உதவுதல்,
- பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர் தங்களது குழந்தைகளின் சிறப்பான செயல்பாடுகளை அப்பகுதியில் உள்ள பள்ளி வயது குழந்தைகளின் பெற்றோர்களிடம் நேரடியாக உரையாட செய்து அதன் மூலம் மாணவர் சேர்க்கை நடைபெறுவதை உறுதி செய்தல்,
- பள்ளி மேலாண்மைக் குழு கூட்டங்களுக்கு மேலாண்மைக் குழுவில் உள்ள உறுப்பினர்கள் குழந்தைகளின் பெற்றோர்களை வரவழைத்து பள்ளி தொடர்பான புகைப்படங்கள் மற்றும் காணொளிகளை திரையிட்டு அரசு வழங்கும் நலத் திட்டங்களை எடுத்துக்கூறி அதன் மூலம் மாணவர் சேர்க்கை நடத்துதல்,
- பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களான தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், இல்லம் தேடிக் கல்வி தன்னார்வலர்கள் ஆகியோர் ஒன்றிணைந்து குழுவாக செயல்பட்டு பள்ளியில் மாணவர் சேர்க்கையை அதிகரிக்க தேவையான நடவடிக்கை பற்றி கலந்தாலோசித்து தேவையான நடவடிக்கைகள் எடுக்கலாம்.

**பள்ளி மேலாண்மைக் குழுவின் பங்கு (SMC)**

- பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து வீடு வீடாக சென்று அரசுப் பள்ளியின் சாதனைகள், கட்டமைப்பு வசதிகள், நலத்திட்டங்கள் கல்வி உதவி தொகைகள் பற்றி பெற்றோரிடம் நேரடியாக எடுத்துக் கூற வேண்டும்.
- பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் (SMC) மாணவர் சேர்க்கை தொடர்பான விழிப்புணர்வு பதாகைகள் எடுத்து செல்லலாம் மற்றும் துண்டு பிரசுரங்கள் வழங்கலாம்.
- மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் முத்தாய்ப்பான திட்டங்களின் கீழ் உருவாக்கப்பட்ட **"நம் பள்ளி நம் பெருமை"** வலைதள செயலியை பொது

மக்களிடம் எடுத்துகூறி அதன் தனித்துவம் சார்ந்து விளக்குவதன் மூலம் மாணவர் சேர்க்கையை அதிகரிக்கலாம்.

- பள்ளியில் சேரும் மாணவர்களுக்கு பள்ளி மேலாண்மைக் குழுவின் சார்பில் பரிசுகள் வழங்கி ஊக்கப்படுத்தலாம்.

**இல்லம் தேடிக் கல்வி தன்னார்வலர்கள் (ITK) பங்கு**

- தன்னார்வலர்கள் தங்களது குடியிருப்பில் உள்ள பள்ளி வயதுக் குழந்தைகள் அனைவரும் பள்ளியில் சேர்ந்துள்ள விபரத்தை உறுதிபடுத்துதல்,
- பள்ளி செல்லாக் குழந்தைகள் தங்கள் குடியிருப்புப் பகுதியில் இருப்பின் அதிக கவனம் செலுத்திட வேண்டும்.
- தன்னார்வலர்கள் வசித்து வரும் குடியிருப்புப் பகுதியில் புதிதாக பள்ளி வயது குழந்தைகள் உள்ள குடும்பம் குடியெர்ந்து வந்திருந்தால் தலைமை ஆசிரியருக்கு தகவல் தெரிவித்து பள்ளியில் சேர்த்திட நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.
- இல்லம் தேடிக் கல்வி தன்னார்வலர்கள் வீடு வீடாக சென்று கண்டறிந்த 5+ குழந்தைகளை அரசுப் பள்ளிகளில் சேர்க்க உதவிட வேண்டும்.

மேற்கண்ட வழிமுறைகளைப் பின்பற்றி 2022–23ஆம் கல்வியாண்டில் அரசுப் பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கையை அதிகரித்திட அனைத்து அரசுப் பள்ளிகளின் ஆசிரியர்கள் / தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்படுகிறது.

ஒம்/–xxxxxxxxx.
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
அனைத்து தொடக்க / நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள்
வேலூர் மாவட்டம்.

நகல்
மாவட்டக் கல்வி அலுவலர், வேலூர் மாவட்டம்.
நகல்
அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம்.